# அக்னிப் பிரவேசம்



## நவீனன்

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

# அக்னிப் பிரவேசம்

# நவீனா

ஐங்கரன் விக்கினேஸ்வரா

வைகறை வெளியீட்டகம்

# அக்னிப் பிரவேசம்

(தமிழ்க் கவிதைத் தொகுதி)

முதற் பதிப்பு - 1999 ஆடி 02

பதிப்புரிமை - நவீனன்

வெளியீடு - வைகறை வெளியீட்டகம்
ருஷ்யா

•

*நன்றி-*

கணனி உதவி - இளையவன்

ஓவியங்கள் - தீபன்

•

**தொடர்புகள்-**

வைகறை வெளியீட்டகம்
P.O.BOX-45,
SMOLENSK,
214019,
RUSSIA.



மக்களுக்காய் மரித்த
மானுட மகாத்மாக்களுக்காய்!

# தீப்பொறியாய் தெறிக்கும் தீந்தமிழ்ச் சுடரொளிகள்


நிமிர்ந்தெழும் மானத்தின் வீரம் ..............09
ஊற்று....................................................14
விழிப்பு ...............................................16
தீப ஒளியேற்றுவீர் விடியலுக்காய் ..........18
என்ன பதில்? ........................................20
தாய் மண்ணை நேசித்த அறிவாளி ........24
தீமோர்- புதிய விடியல் நட்சத்திரம் ........27
புத்துணர்வின் பிரசவம் .........................30
என் பேனாவும் - என் துயரும் ..............33
நினைவழியா சென்னை நிமிடங்கள் .......36
ஒரு உட்பவிப்பின் முதல் வரிகள் ..........39
போர்க்கோல மனம் ...............................42
உதிக்கும் விடியலில் நீ ஒரு செஞ்சுடர் ...44
என்னோடு என்னாக ..............................47
உரத்துக் கூறுங்கள் உரிமையுள்ளவரே ...50
பதினாறாவது வயதும் நானுமாய் ...........55
உன் வரவை வேண்டி ...........................58
என்னை எரிக்கும் நான் .........................61
புதிய சோதரி ......................................64
இறுதியல்ல, இனி ஆரம்பமே ................67
அக்னிப் பிரவேசம்...............................70

# நெஞ்சினில் நெருப்பேற்றி விரையும் விடியலுக்காய் அக்னிப் பிரவேசத்தில்!.

என் எண்ணச் சிறகுகளுக்கு வண்ணந் தீட்டி, கவிதைகளாய் வானத்தில் பறக்க விட்டுள்ளேன். புதுமைகள் பலவும் படைக்கும் புரட்சித் தமிழின் இனிமையை, செங்களம் கண்ட பனி முகடுகளிலும் தென்றலோடு தேனிசையாய் கலந்து வருவதையும் காண்கின்றோம். தமிழின் இனிமை, தமிழின் செழிமை, தமிழின் பெருமை உலகெங்கும் வியாபிப்பதனைக் கண்டு, பேனாக்களை ஏந்திய கரங்களில் ஒருவனாய் நானும் மனமகிழ்வு அடைகின்றேன்.

இன்று, தமிழ் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் வாழும் மக்களின் "பிராந்திய மொழி" என்ற குறுகிய எல்லையை மீறி சர்வதேச மொழியாக வளர்ச்சி அடைந்து வருகின்றமையை எண்ணி மன மகிழ்வு அடைகின்றேன்.

உலகெங்கும் கணணியின் அவசியம் அத்தியா வசியமாகிக் கொண்டிருக்கும் போது, தமிழிலும் கணணியின் பயன்பாடு கட்டாயமாகிக் கொள்கின்றது. அண்மைக் காலங்களில் தமிழ்க் கணணி மாநாடுகள் நடைபெற்று வருகின்றமையும் குறிப்பிடத் தக்கது. தமிழ் எழுத்துச் சீர்திருத்தமும் கணணி மூலமாக செழிமை அடைந்து வருவதனையும் அறியக் கூடியதாயுள்ளது.

கணணி மாநாடுகளில் புதிய புதிய அணுகு முறைகளும், புதிய புதிய எழுத்துச் சீர்திருத்த மாற்றங்களும் தமிழ் மொழியை மேலும் செழிமைப்படுத்தி

– வளப்படுத்த வேண்டும் என்பது எல்லோரினதும் அவா வாகின்றது.

இக்கவிதைகள் "அக்னிப் பிரவேசமாய்" என்னுள் எழுந்த தீப்பொறிகள் – கவிக் கணைகள் உங்கள் விழிகளின் முன் பூகம்பமாய், அதிர்ந்து கொள்கின்றது.

ஒவ்வொரு வரியிலும் – என் உள்ளத்தின் உயிர் உருவங் கொள்கின்றது. ஒவ்வொரு கவிதையிலும் என் நிஜ முகத்தினை விதைத்துக் கொள்கின்றேன். என் உணர்வுகளை தொட்டுச் சொல்லும் கவிதைகள், என் வாழ்வின் உயிர் நாதத்தை வெளிப்படுத்திக் கொள்வதிலும் மன மகிழ்வடைகின்றேன்.

தமிழ் – வாழுந் தமிழ்! வளருந் தமிழ்!! என்றும் – எங்கும் எதிலும் தமிழ் என்ற உயிரொலி சர்வதேசம் எங்கும் ஒலிக்கின்றது. ஆனாலும் நாம் பேசுந் தமிழுக்கு உள்ள சுதந்திரம், நாம் எழுதும் தமிழுக்கு உள்ள சுதந்திரம் எங்கள் தாயகத்தினில் மறுதலிக்கப் பட்டே வருகின்றதும் மறுக்க முடியாத உண்மையே.

தமிழ் என்ற இனத்தின் தேசிய அடை யாளத் தனைப் பறித்திட பல்வேறு ஏகாதிபத்திய – பயங்கர வாத சக்திகளும் முயன்று வருகின்றன.

ஆயினும் தமிழ் என்றும் வாழும் என்பதற்கு அடையாளமாய், வீறு கொண்டு எழும் விடுதலைப் பயணம் சான்றாகின்றது. தேசிய விடுதலைப் போராட்டம் வெற்றி கொண்டிட தமிழர்களாகிய நாங்கள் முழுமையான பங்களிப்புக்களை ஆற்றிட வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமா கின்றது.

ஆயினும், ஒரு இனமே பயங்கரவாத கொடூர ஆக்கிரமிப்பின் அழிவின் விளிம்பில் நிற்கும் போது, தமிழ்

தமிழுக்காய் என்று "நா"வால் மட்டும் குரல் கொடுக்கும் சிலர் கைகட்டி, வாய்மூடி, விழிமறந்து கற்பனா வாதத்திலும் — கனவுலகத்திலும் இலக்கியங்களைப் படைத்து வருகின்றமை வருந்தத் தக்கதே.

இங்கு யாரை நான் சாடிக் கொள்கின்றேன் என்றால் — முக்கியமாக தமிழ்நாட்டு கலை இலக்கிய கர்த்தாக்களையே. தமிழ் நாட்டின் அனைத்து கலை இலக்கிய வாதிகளும் இந்த வரட்டுத்தனமான கற்பனா வாதிகள் என்று நான் கூற முற்படவில்லை. அனைத்து தமிழக கலை இலக்கிய படைப்பு கர்த்தாக்கள் உளத் தூய்மையாய், நெஞ்சுக்கு நேர்மையாய் அல்லல்ப்படும் தமிழ் இனத்துக்காய் குரல் கொடுக்க வேண்டும்.

கண்மூடி, வாய் மௌனித்து, கைகளைக் கட்டிக் கொண்டு, உலகத்தின் முன் உண்மைகளை எடுத்துரைக் காவிடின் நாளை அழிகின்ற எங்கள் இனத்தின் எதிரிகளுக்கு துணை போனவர்களாகவே வரலாறு கூறிக் கொள்ளும்.

தர்மத்தின் போராட்டமாய், உலகமே வியக்கும் வண்ணமாய் வீர தீரத்துடன் தியாக வேள்வியில் உருவாகும் சுதந்திர பூமிக்கு தமிழக கவிஞர்களே — கலைஞர்களே, கலை இலக்கிய கர்த்தாக்களே உங்கள் படைப்புக்களால் பங்களியுங்கள். இன்னமும் காலங் கடந்து விடவில்லை — உங்கள் பேனாக்கள் எதிரிகளின் மீதாய் பூகம்பமாய் முழங்கட்டும்.

உண்மைக்காய் — நேர்மைக்காய், சத்தியத்துக்காய் — தர்மத்துக்காய் நடக்கும் தியாக வேள்வியில் நீங்களும் "ஆகுதி" யாகுங்கள். காலங்கள் கரைந்தாலும் கவிதையின் வரிகளால் — உங்கள் வாழ்வின் தூய்மை என்றாவது ஓர் நாள் புலப்படும் என்பது திண்ணம்.

*வரலாற்றின் வரிகளில் பொன் எழுத்துக்களால் செதுக்கப்படும் உங்களின் படைப்புக்களும் வெறும் புகழுக்கும் பெருமைக்கும் மாத்திரமன்றி, ஒரு தியாக பூமியின் அவதரிப்புக்காய், இத்தியாக வேள்வியில் தீக்கனல் தெறித்திட உங்கள் கரங்களும் உயரட்டும்.*


*சத்தியமும் — நேர்மையும், உண்மையும் — தியாகமும் என்றும் தோற்றதாக வரலாறே கிடையாது. விரைவில் விடியும் எங்கள் சுதந்த்ர பூமி. விரைவில் மலரும் எங்கள் தியாகத் திருநிலம். விரைவில் சிறகு விரித்துப் பறக்கும் எங்கள் தமிழ்ச் சுதந்திரப் பறவை.*

*கணனி யுகத்தினில், எங்கள் கல்லறைகளும் கருத்தரிக்கும் என்ற யதார்த்தக் கனவுகளுடன் "அக்னிப் பிரவேச"த்தினுள் தம்மையே தியாகித்து மக்களுக்காய் மரித்த மானுட மகாத்மக்களுக்களுடன் நானும் — என் கவிதைகளுடன் நுழைந்து கொள்கிறேன்.*

*எந்தன் கவிதைகளுக்கு என்றும் கருப் பொருள் "விடுதலை" என்ற ஓரே அதி உன்னத உயிர்ச் சொல் தான். ஆதலினால் விடுதலையை, எங்கள் தேச விடுதலையை நேசிக்கும் நீங்களும் அக்னிப் பிரவேசத்தில் என்னோடு என்னுடனாக உள் நுழைவீராக!*

என்றும் அன்புடனாய்
*நவீனன்.*

ஐங்கரன் விக்கினேஸ்வரா



## நிமிர்ந்தெழும் மானத்தின் வீரம்!

ஒரு
கைப்பிடிச் சாம்பலுக்குள்
அடங்கிப் போகும்
மனித வாழ்வு.
ஏனிந்த கொடுமையாய்
ஏனிந்த போர் வெறி!

முடிவற்ற எல்லையாய்
முற்றுப் பெறாமல் தொடரும்
இரத்த வெறி
பீறிட்டுப் பாயும் குருதி வெள்ளத்தில்
மூழ்கிப் போயிருக்கும் - இன
வெறியனே
அடங்கிக் கொள்! - அ.ஃ.தேல்

அடக்கிக் கொள்...

உனைப் போலன்றியே
நாமும் வாழ வசதிப்பட்டோம்...
முற்றத்து மாமர நிழலில்
முகம் மலர்ந்து வாழத் தானே
ஆசைப்பட்டோம்...
உந்தன் வீட்டு ரம்புட்டான்
கோட்டங்களையா
சொந்தங் கொண்டாடினோம்?...

நித்தம் எமக்கு நித்திரையிலேயே
நிம்மதி இழக்க வைக்கின்றாயே!...
கொட்டும் மழையையும்
மிஞ்சி - எங்கள்
சந்ததியை அழிக்கும் - பீப்பாய்
குண்டுகளையே
வானமே இடியக்
கொட்டுகிறாயே!...

எதற்காய்?...
கைப்பிடித்த மனைவியையும்
வயதுக்கு வந்த கன்னிகளையும்
தாறு மாறாய் ருசித்தும் - கடூரமாய்
சுவை பார்க்கிறாய்...
எதற்காய்?..
உந்தன் அன்பின் லொக்கு அக்கேயோ
அன்றில் சுது நங்கியையா
நாமாய் கண்ணெடுத்துப் பார்த்தோம்?..
கனவினில்க் கூட

தயவோடு - அன்புச் சோதரமே
எனவல்லவா விழித்தோம்!

தெருவெங்கும் பதுங்கி
கால் தூக்கி சலம் கழிக்கும்
எங்கள் ஊர் நாய்களுக்குக் கூட
நன்றியுண்டு!
அடுத்த வீட்டுக்காரன்
அனுமதியின்றி வந்தால்த்தான்
நாயுந் தானே குரைக்கும்!
இது உந்தன் ஊரு
'பள்ளா'க்களுக்கும் புரியுமே!

அதனினால்த் தானே - எமைக்
காவு கொள்ளும் காக்கிப்
பச்சை பேய்களாய்
உங்களைப் பார்த்தும்,நுகரும் போது
நாய்களும் குரைக்கும்
கலைத்துக் கலைத்து
ஊரை விட்டு விரட்டவே
குரைக்கும்...
இறுதி வரையாய்!...

இன்னும் புரியவில்லையா?...
ஆறறிவில்லாத உயிரினங்களுக்கும்
புரிகையில் - பகுத்தறிவுள்ளதாய்
பாசாங்கு பண்ணும்
உங்களுக்கும்
எப்படி புரிய வைப்பது?...

தினந்தோறும் எமை
வதை கொண்டு வாழ்வதில்
என்ன கண்டீர்?...
மிருக வதைக்கே இடமில்லா
கௌதமரின் வழித் தோன்றல்களாய்
மகாயானங்களும்
தம்ம தீபங்களும் உரைத்துக்
கூறுவதினில்
உங்களின் நாவுக்கும்
கூச்சமின்றியோ குரல் கொடுக்கின்றீர்?..

சித்தார்த்தன் கூட
இளஞ் சிறுமையில் சினந்து
கொண்டார் - மிருக வதைக்கும்
மனித வதைக்குமாய்
இந்துவாய் - இயல்பான
மனிதனாய் போதித்துக்
கொண்டார்...

இனியேது கூற முடியும்?
முடிவாய்ப் போய் விட்டது...
எம் கிடுகு வேலிக்குள்
அத்து மீறி வந்தால் - எந்தன்
அப்பு ஆச்சி ஆண்ட மண்ணின்
கொட்டில்களை அழிக்க வந்தால்
எங்களின் கொல்லைப் புறத்திலுள்ள
பிக்கான்களும் பீரங்கிகளாகும்...
அடுப்படிக் கத்திகளும்
போராயுதங்களாகும்...


சற்றே சிந்தி!

பொறுமையாய் எங்கள்
பூவினிலுமினிய பூவையர்
பொறுத்திருக்கின்றனர் - அவர்கள்
பொங்கி எழும் நாளில்
உந்தன் வாலாட்டும்
சேஷ்டைகள்
தானாகவே - அன்றில்
நீயாகவே
நிறுத்துக் கொள்!

அன்றே
நிமிரும் எங்கள் - பனியிலும்
சூட்டிலும் வளையாத
அருகம் புல்லாய் நிமிரும் - எங்க்ள்
மானத்தின் வீரம்!

எங்கள்
மானத்தின் வீரம்!

●



## *ஊற்று!*

எனக்குள் ஊறிக் கொண்டிருக்கும்
எல்லையிடப்படாத எரிச்சல்கள்...

பனி கொட்டி, மண் நுரைகளின்
மேலாய்
விழித்துக் கொள்ளும், உதிர்ந்துபோன
இலைகளும் கிளைகளுமாய்...

மீள மீள இன்றோடு
தானான இயற்கையின்
சீற்றங்களை இட்டு
சீறிக் கொள்ளும் - மனம்
என்னுள்!...

முதிர்வின் கூனலில்

இளமையை முதுகில்க் காவிச்
செல்லும் ஒரு பழமையான
புதுமை.


வாடிவதங்கி - சேற்று
நாறலில் தளிர்விடும்
முகிழ்களின் நம்பிக்கை...

எரிந்து கொண்டிருக்கும்
உள்மன எரிச்சல்கள்
எனக்குள் - என்னுள்ளாக
ஊறிக் கொண்டே இருக்கும்...

ஒவ்வொரு முகங்களிலும்
கவலைகளும் - துயரங்களும்
துவண்டு போயிருக்கும்
துன்பியலை காணுகையில்
தளிர் விடும் ஏதோவாக
கையுடன் மேலாய்
இருதயத்தில்
நம்பிக்கை...

நாளை நாளையென்ற
நம்பிக்கையின்றி - இன்றோடு
இன்றாக முகிழும் விடிகாலையில்
மலர்ந்து கொள்ளும்
என் மனப் பூவினில் -இதழ்
நம்பிக்கைகளாய்...

●



## விழிப்பு

இன்னும் எரிகின்ற
தீக்குழம்புகளின் மேலாய்
சாபங்களையும் - சபதங்களையும்
பலிதமிட - மீள மீள
ஒரு தலைமுறையின் இழப்புக்களுமாய்
தொடரும்!

காற்றிலும் வெற்றுக் காகிதங்களிலும்
கைச்சாத்திட்ட உறுதி மொழிகள்
ஊளையிடும் ஊரையண்டாத
நாய்களுக்கும் கூட புரிந்து விடும்!...


முகமூடிகள் - முகங்களை மாத்திரம்
மறைத்திடாமல் உள் மனங்களையும்

மூடிக் கொள்ளும்!

இன்னும் எரிகின்ற
தீக்குழம்புகளின் மேலாய்
குளிர்காயும் உதிறிகளின்
சபதங்கள் இன்னமுமாய்
தொடரும்!...

தேரை தெருவைத் திருத்தவும்
காட்டைக் கழனியை வளமாக்கவும்
வீட்டைத் தெரு விளக்கினால் ஒளியேற்றவும்
முழக்கமிடுவர் -முந்தானை கட்டிய
மூடர்களாய்
முகங்களில் மூடிய முகமூடிகள்
நாட்டின் நாட்களையும்
அலங்கரிக்கும்!
போதும் -பொறுமையாய்
புத்துணர்வோடு பூரிக்கும்
நாளினில்
கரங்களில் ஏந்திய கருவிகள்
விடை பகரும்!
விரையும் எங்களின் சாபங்களின்
பலிதங்களும் பலிக்கும்
விரைவாய்!

●



## தீப ஒளியேற்றுவீர் விடியலுக்காய்!

படையேறு தமிழா படையேறு
பகுத்தறிவின் விடிவிற்காய்
படையேறு தமிழா படையேறு.

அடிமையாய் வாழ்ந்தோம்
அடக்கி ஒடுக்கியே - எமைத்
தினந்தோறும் வதை கொண்டே
வாட்டியே
கொடுமைப்படுத்தினரே...

எரியுண்ட வாழ்வும்
புதையுண்ட வரலாறும்
இனி ஒரு போதும் நிகழாவண்ணம்
விழித்தெழுவோம்...

கடுங்கொடூரர் எமைதனையே
கொலை வெறிக் களங்களில்
பலியெடுத்தனரே...

இனி நாளும்
நமதாய் எழ
எழுகவே - எழுகவே...


வீசும் தென்றல் காற்றும்
கூட
விடுதலைக் காற்றாய்
வீசிடவே...

இனி நாள் தோறும்
தீபாவளியே - அசுராசுரரை
வென்றிடும் வீர
நாட்களே...

படையேறு தமிழா,தமிழா
படையேறு...

ஒளியேற்றுவீர் - தீப
ஆவளியில் தினந்தோறும்
மனதினில் ஒளியேற்றுவீர்...
விடியல் ஒளியேற்றுவீர்...
படையேறு தமிழா,தமிழா
படையேறு...

●



## என்ன பதில்?..

ஆண்டாண்டாய் அழும் குழந்தைக்கு
உங்கள் ஆறுதல் பதில் தான் என்ன?

மைலாயின் நிர்வாணக்
குழந்தைக்கும்
அங்கோலாவில் காலைக்
கையில் தூக்கி வரும்
கண்ணி வயல்களில்
கதறும் சிறுவர்க்காய்
என்ன பதில்?...

ஆண்டாண்டாய் அழும் குழந்தைக்கு
உங்கள் ஆறுதல் பதில் தான் என்ன?

காசாவிலும் மேற்குக் கரையிலும்

தாயைத் தனயரை
தம் கண் முன்னே பொசுக்கிய
கொடூரத்தால் மௌனித்து
ஊமையான பாலகர்க்காய்
என்ன பதில்?..

ஆண்டாண்டாய் அழும் குழந்தைக்கு
உங்கள் ஆறுதல் பதில் தான் என்ன?

ஆந்திராவிலும் - தெலுங்கானாவிலும்
பீகாரிலும் நாகலாந்திலுமாய்
சாதியும் சண்டைகளிலுமாய்
எதிர் காலத்தையே
இழந்து விட்டு இடரும்
மழலைகளுக்காய்
என்ன பதில்?..

ஆண்டாண்டாய் அழும் குழந்தைக்கு
உங்கள் ஆறுதல் பதில் தான் என்ன?

வன்னியிலும் வாகரையிலுமாய்
பட்டினிப் பசியுடனாய்
தொடரும் அழிவுகளில்
அநாதைகளான
எங்கள் குழந்தைகளுக்காய்
என்ன பதில்?..

ஆண்டாண்டாய் அழும் குழந்தைக்கு
உங்கள் ஆறுதல் பதில் தான் என்ன?

துருக்கிய துப்பாக்கியாளர்களின்
துன்புருத்தலினால் துயருறும்
குர்திஸ்தானிய சிறுவர்களுக்காய்
என்ன பதில்?..

ஆண்டாண்டாய் அழும் குழந்தைக்கு
உங்கள் ஆறுதல் பதில் தான் என்ன?

இன்னும் அழுதழுது
கண்ணீர் கூட
வற்றிப் போன
வன்னிக் குழந்தைகளுக்காய்
என்ன பதில்?..

ஆண்டாண்டாய் அழும் குழந்தைக்கு
உங்கள் ஆறுதல் பதில் தான் என்ன?

வெள்ளை மாளிகையிலும்
எடின்பரோத் தெருக்களிலும்
கோலாகலமாய் கேக் வெட்டி
சிறுவர் தினமென - வெகுவாய்
கொண்டாடிக் குதகலிக்கும்
பெரியோரே!...


ஆண்டாண்டாய் அழும் குழந்தைக்கு
உங்கள் ஆறுதல் பதில் தான் என்ன?

சற்று சிந்தியுங்கள்!..
அழுகின்ற
ஆண்டாண்டாய்

அழுகின்ற
குழந்தைக்கு
பதில் தான் என்ன?

ஆண்டாண்டாய் அழும் குழந்தைக்கு
உங்கள் ஆறுதல் பதில் தான் என்ன?

●



## தாய் மண்ணை நேசித்த அறிவாளி.

கை அசைத்து காலையில்
சந்திப்போம் என விடை கொடுத்த
நண்ப!...

அறிவாளி! விடை கொடுக்கப்பட்டது
அன்றைய மாலையுடன்
உனக்குமாய்- தேவகுமாரனெனும்
அறிவாளிக்குமாய்.

மாபிள் அடித்து அணிலுக்கும்
ஓணான்களுக்குமாய் கெட்டப்போல்
குறிபார்த்து- சவ்வாய்
கிறிக்கட் மட்டை பிடித்தும்

இன்னும் அழியாத நினைவுகள்...

ஆக்கிரமிப்பின் அநியாயத்தை
உணர்த்தியவன்- ஆப்கானிஸ்தானோ
அங்கோலாவோ- தாய்மண்ணோ
ஆக்கிரமிப்பின் அட்டூழிய
அநியாயத்திற்கு எதிராய்- அறிவுடன்
குரல் கொடுத்து பலர்க்குமாய்
அறிவூட்டியவன்- நீ.

உன் மரணம்
சில வேளைகளில்
தோழமை மிகு- எதிரிகளின்
சலவை செய்த மூளைகளுக்கும்
புரியாமல்- துர்ப்பாக்கிய
துப்பாக்கிகளால் முழங்கியிருக்கும்.

நாளைய- இன்னொரு
துரையை இழந்த
இழப்பு எமக்கு!
மீண்டும் உந்தன் நினைவுகளில்
நாங்கள்.

பொங்கும் விடியலில்- உந்தன்
பயணத்தின் சுவடுகளை
வரலாறு தேக்கிக் கொள்ளும்.


தோழமையாய் கருத்துக்களால்
முட்டியிருப்போம்.
கண்ணியமாய் இலட்சிய

இலக்கின் வெவ்வேறு
பாதைகளில் பயணங் கொண்டோம். . .
ஆயினும் எங்களின்
இறுதிப் பாதையில்
விடியலின் மிளிர்வே
ஒளிரும்!

உனை இழந்த தாய்க்குமாய்
அழுகின்ற உறவுக்குமாய்
ஆறுதலுக்காய்யல்ல- அஞ்சலி
மறுதலிக்கப்பட்ட உந்தன்
அறிவாற்றலுக்காய்!
பிறப்பெடுக்கும் இன்னும் பலருள்
தேவகுமாரர்களும்
உருவங் கொள்வர்.

நீ- தாய் மண்ணை
நேசித்த
அறிவாளி!

●



# தீமோர் ! புதிய விடியல் நட்சத்திரம்.

தூரத்து இடி முழக்கம்
செவிப்பறைகளை கிழித்துக் கொள்கிறது.
விண்ணின் மின்னல்கள்
கண்ணைக் கூசிக் கொள்கிறது.
தென்னாசியாவின் - புதிய
விடியல் நட்சத்திரம்
தீமோர்!

தீமோர்!
வரலாற்றின் நண்பர்களால்
எதிரிகளாகவும் எமனாகவும் எழுந்து
யகார்த்தாவின் அட்டூழிய அழிவுக்குள்
எரிந்து போன தேசம் -கால்
நூற்றாண்டின் பின்னராய் -கிழக்கு

தீமோரியக் கடலோரங்கள்
சுதந்திரக் காற்றின்
புதிய வீச்சில்
உயிர்க்கின்றன...

வரவேற்கிறோம் ,வாழ்த்துகிறோம் - வீர
வியட்நாமின் பின்னராய்
தென்னாசியாவின்
புதிய விடியல் நட்சத்திரமாய்
விடுதலை பெறும் தீமோரை!

அடக்கப்பட்ட மக்களின்
கரங்கள் இன்னமும் ஓயவில்லை...
அழிக்கப்படும் மனிதர்களின்
எண்ணிக்கையும் இன்னமுமாய்
குறையவில்லை... ஆயினும்
தீமோரிய விடுதலைக் கீதம்
எங்கள் காதுகளுக்கும் கேட்கிறது..
செவிப்பறைகள் அடைபட்ட பின்னரும்
இன்னும் தெளிவாய் - இனிதாய்
கேட்கிறது...

தீமோரிய - கிழக்குத் தீமோரிய
விடுதலை தென்னாசியாவின்
விடுதலை அரங்கிற்கு புதிய
வளர்ச்சிப்படி...

உங்களுக்கான விடுதலை
எமக்குமாகட்டும் -சுயநலமின்றி
உங்களின் விடியலுக்காய்


'ஆசிய மாணவர் ஒன்றிய'த்துடன்
கரங்கோர்த்து குரல் கொடுத்த
எமக்குமாய்
உங்களின் குரல் எமக்குமாய்
உரத்தே ஓங்கி
ஒலிக்கட்டும்!

விடியலின் நட்சத்திரம்
விரைவாய் மிளிரும்...

தீமோர்! - தென்னாசியாவின்
புதிய விடியல் நட்சத்திரமாய்
எம்
விடியலின் நட்சத்திரமாய்
விரைவாய் மிளிரும்...

விடியலின் நட்சத்திரம்
விரைவாய் மிளிரும்...
விரைவாய் மிளிரும்...

●



## புத்துணர்வின் பிரசவம்.

ஏது பிரசவிப்பின் அக மலர்ச்சி.
நிறை மாதக் கர்ப்பிணி
சுகமாய் பெற்றெடுக்கும்
ஆரோக்கியக் குழந்தை.
சுகமாயும், சுகம் பெறவுமாய்
ஆராதனைகளும் வேண்டுதலுமாய்
நிறை கொள்ளும் ஆசைகள்...

ஏன்!
கவிதைகளைக் கட்டி - வரித்து
தொகுத்து - அச்சிலேற்றி
விரல்களால் பக்கங்கள் விரியும்
வரை - ஆரோக்கியமாகத்
தவழ்வதும் ஒரு

குழந்தையின் பிரசவிப்பு.
இதுவும் பிரசவிப்புத் தான்
ஓர் உட்பவிப்பு...

ஏன்!
தினந்தோறும் காலையில்
சுடச்சுட கரங்களில் விரியும்
தினசரிகள் கூட - ஒரு
பத்திரிகைத் தாயின் அன்றாட
பிரசவிப்புத்தான்.

கருத்தடை - பத்திரிகையாளனுக்கு
தணிக்கை.

சிசு மரணம் - அச்சியந்திரங்களின்
பாழாய்ப் பழுதடைதல்.

குறைமாதம் - நடுநிலைமை எனும்
வரட்டுவாத பிற்போக்குத்தனம்.

நிறை மாதம் - உண்மையின் சார்பில்
உணர்வின் சுதந்திர அறுவடை.


கருக்கலைப்பு - எழுத்தின் சுவாசத்தை
அதிர்வாய் நிறுத்தும் ஆசிரியக் கை.

இரட்டைப் பிரசவம் - வாரமலர்களின்
அலங்கார இலவச இணைப்புக்கள்.

இப்படிப் பலவாய்

மனித உட்பவிப்பின் மலர்தலாய்
பத்திரிகையிலும் அகமலர்ச்சியில்
முகம் மலரும்
பிரசவக் குழந்தைகளுடனாய்!...

●



## என் பேனாவும் என் துயரும்...

காதல்க் கவிதை எழுத
காகிதங்களின் மேலாய்
காத்துக் கிடக்கின்றது - என்
பேனா.
இன்னும் அதற்குப் புரிவதாயில்லை
இதயத்தின் வலி!

வைர முத்துவையும், கண்ண
தாசனையும் - காதலுக்கு
உவமைகாட்டி பாட்டெழுது
என வரையறுக்கும் - என்
பேனா.
இன்னும் அதற்குத் தெரியாது

அவர்களின் உள் உளச் சோகம்!


நிலவைக் கூண்டிலடைத்தாயும்
வானவில்லை விழியில்
வரைந்ததாயும் கவிபாடு
என வேண்டும் - என்
பேனா.
இன்னும் அதற்கு விளங்கவில்லை
இயற்கையின் யதார்த்தம்.

தொலைதூரம் என்னைத் தொலைத்து
முழுக்குப் போட்டுச் சென்றவளை
நினைத்து தூது விடு
என்கிறது - என்
பேனா...
இன்னும் அதற்குப் புரியவில்லை
அவள் கைக்குழந்தையுடன் - தன்
புதுக் கணவனுடன் சென்றதனை...

குயில் பாடும் பாட்டுக்கேட்டு
தோகை மயில் ஆடும் அழகைக்
கண்டு - விழியோரம் நனையும்
கண்ணீர் - இன்னும் அவளோடு...
அவளோடு எந்தன்
அன்பை இறுக்கமாய் இணைத்த
நாட்களையுமா
பாடக் கேட்கிறது - என்னால்
எழுதவுங் கேட்டுக் கொள்ளுமா - என்
பேனா...

வீதியோரம் சவரம் செய்யா
காதற் சின்னங்களாய்
முகங்களுடன் புதுப் புது
தேவதாஸ்க்களை...
பார்த்தும் பார்க்காமல் - துயர்
கேட்டும் கேட்காமல் இருக்கும்
உயிர் ஊட்டும் - என்
பேனா...
எந்தன் பேனாவுக்குமாய்
புரியவில்லை...

●



## நினைவழியா சென்னை நிமிடங்கள்..

தொற்றிக் கொண்டு துள்ளி
ஏறிக் கொண்ட படியாய்
படிக் கட்டுக்களின் பாரச் சுமையில்
ஊர்ந்து தொடரும்
பல்லவனின் பிரசவப் பயணம்...

தாம்பரத்துக்கும் தாமரைக்கும்
வேளச்சேரிக்கும் கிண்டிக்குமாய்
அண்ணாசாலையில் நகரும்
எறும்பு ஊர்திகளின் பல்லவப்
பயணம்...
கல்லூரி போய் பட்டம் வாங்க
புத்தகத் தாள்களையே பட்டம் விட்டதும்
சாலையோர காதல்க் கனவுகளில்

எச்சில் விடும்
ஜொல்லுக் காளையர்கள் நடுவில்
ஜோல்னாப் பையுடன்
நான்...

தேவநாய பாவணர் அரங்கிற்கும்
பெரியார் திடலுக்குமாய்
ஸ்டாலின் நினைவு நாளிலும்
சாலை இளந்திரையனார்
கவி அரங்கிற்குமாய் - கால் கடுக்க
பயணங் கொண்ட - என்
இலக்கியத் தேடலின்
சென்னைப் பயணம்...


கண்ணுக்குத் தெரியாத
கட் அவுட் கலாச்சாரத்தில்
கவிழ்ந்து வீழும் நிலையில்
கூப்பிய கரங்களுடன்
கும்பிடு போடும் தலைவர்களின்
பிரமாண்ட உருவங்களும்
தலை கவிழும் தலைவர்களையும்
சந்தித்த படி சாலை வியர்வையில்
நனைந்து கொண்டே
தொடரும் சென்னை
நாழிகைகள்...

மெரினா நீலக் கடல் வெளியில்
இலவசமாய் உப்புக் காற்றும்
தாடை பல்லுடைக்கும்
சுண்டலும் அவிகடலையும்

கொறித்துக் கொண்டு
காக எச்சங்களின்
நனைப்பில் தலை குளிரும்
மீசை முறுக்கிய பாரதியை
பார்த்து மனம் துளிர
தொடரும் வாழ்வின்
யந்திரச் சில்லுகளுக்கிடையில்
நான்...
எட்ட நிற்கும் உயரத்தில்
அண்ணாவும் பெரியாரும்
தள்ளியே துயிலுரும்
இரத்தத்தின் ரத்தமும்
மணலுக்குள் தலையை
மூடிக் கொண்ட படி
தீக்கோழியாய் இன்னும் பலர்!
கல்லாய்க் காவல் காப்பர்
கருகும் சென்னையை...

காகிதக் கிறுக்கல்களை
கையில் காவிய படி
'இராசகிளி அச்சகம்' விரைந்ததும்
நவீனமோ - புதுமையோயென
மகிழ்ந்து
வியர்வையில் வியந்த
சென்னை நாட்கள் - ஒரு கவிஞனின்
இளமைக்கு உயிரூட்டிய
நாட்கள்...

●



## ஒரு உட்பவிப்பின் முதல் வரிகள்!

இன்னும் சில நிமிடங்களில்
உயிர்க் கருவாய்
கருவறைக்குள் மிதந்து கொள்வாய்.

பல நாளாய் கலைத்து
வெகு நேரம் களைத்து
உனைக் காவும் கருப்பையின்
சொந்தக்காரியின் - சொந்தக்காரக்
காவலன் - காதலன் நான்.

ஏத்தனையே இரவுகளை
தனிமைக்குள் விழுங்கிய நான்.
நகங்களை கடித்துத் துப்பியும்
வழுக்கம் தலையின் சொடுகின்

கவலையுடனாய் காலந்தள்ளியும்
நாட்காட்டியின் - தினப்
பக்கங்களை கிழித்த படி
ஓடிக் கொண்ட நானும்
நாட்களுமாய்...

புதமையென புரிய வைத்தவள்
என்னவள் - உன்னைக்
காவிக் கொள்பவள்.
கனவிலும் நனவிலுமாய்
காதல் மழையில் என்னை
முழுவதுமாய் நனைய
வைத்தவள் - என்னவள்.

இளமையின் வரிகளை
இரை மீட்டித் தந்தவள்.
காலத்தின் கரைதலில்
காதலின் சுவையை ஊட்டியும்
ஊக்கியுமானவள்
என்னவளே!


இன்று - முதலிரவாய் ஓர்
உட்பவிப்பின்
ஜனனப் பிரவேஷம்
உனக்கு!

இன்னும் சில நிமிடங்களில்
உயிர்க் கருவாய்
கருவறைக்குள் மிதந்து
கொள்ளப்போகும் - உனக்கு

எனக்குள் இருந்தும்
என்னிடம் இருந்தும்
பாராட்டுக்களும் வாழ்த்துக்களுமாக!...

இன்னும் சில நிமிடங்களில்
உயிர்க் கருவாய்
தொப்புள்க் கொடி உறவுக்காய்
உன் - உட்பவிப்புமாய்
என் - உற்பத்தியுமாய்
நீயும் - நானுமாய்...

●



## போர்க் கோல மனம்!


மனமுகத்தை
மூடிக் கொண்டிருக்கும்
அலங்காரத் திரைகளை
அகற்றி விட்டு
வெறுமையாய் நிரம்பிக்
கொள்கிறது மனம்.

இயற்கையை போர்வையாய்
போர்த்திக் கொண்டு
பனிக்கால
உலாப்போக்கினில்
ஊர் சுற்றி ஊர்வலங்
கொள்கிறது மனம்.

இன்னுஞ் சொல்வதற்கு
ஏது உள்ளது?
கடவுள்களையும்
கனாக் கால இரவுகளையும்
கற்பனாவாதமெனவே
தர்க்கங் கொண்ட படி
மனதுக்குள் போர் - மீளவே
மூண்டு கொள்ளும்.
நானும் நானாக
என்னில் விழுமியிருக்கும்
ஆதங்கங்கள் எல்லாம்
கர்வங்களின் மேலாய்
கருக் கொள்ளும்.

என்னை - என்னுள்ளே
தொலைத்து விட்டு
இன்னும் தேடிக்
கொள்கிறேன்.
முகமிழந்த மனத்தினையும்
என்னையும் கூடவே.
இறுதியின் முடிவிலாய்
கர்வமேயற்ற
கருணையுள்ளவனாய்
காலம் மாறும் வரை
என்னுள் என்னையே
தொலைத்துக் கொள்கிறேன்.
கடவுளுக்குமன்றி
கற்பனாவாதத்துக்குமன்றியே!...

●



## உதிக்கும் விடியலில் நீ ஒரு செஞ்சுடர்!

மரணித்துப் போய் - உனக்காய்
கல்லறையின் மேலாய்
கவிதாஞ்சலி செலுத்தியும்
காலச் சக்கரம் விரைந்து போயிற்று.

குளக்கரைகளில் குஞ்சு மீன்களையும்
தூண்டிலிட்டு கொட்டாவி விட்டதும்
குளவிக் கூடுகளில் கல்லெறிந்து
தலை தெறிக்க காற்தடம் புரண்டு
நெற்றியில் சொட்டிய
இரத்தக் கரைகளுடனாய் - 'சிவ
ஜீவ்'னின் நேச நினைவுகள்.

பள்ளிக்குப் போகும் - பசுமை
இளமைகளைத் துறந்து விட்டு
மக்களுக்காய் - மண்ணுக்காய்
கருவியை ஏந்திய கரங்களுடன்
உன் கடின பயணம்
இடை மறிக்கப்பட்டது ஏன்?...

தீப்பொறியாய் இலக்காய்
செவ்வானமாய் செந்தளமாய்
இன்னும் புதிய கண்ணோட்டமாய்
விரிந்த அகால படுகுழிப்
புதை குழிகளில்- விழிம்புகளில்
கருக்கப்பட்ட விடியலின்
வித்துக்கள் பல
உன்னைப் போல - இன்னும்..


எரிகின்ற கனலுக்குள்
உன்முகம் கருகாது - ஆயினும்
தெளிவாய் புலரும்
இன்னொரு தீப்பொறியாய்த்தான்
பொறிந்து கொண்டிருப்பாய்...
'பண்டாரிக்குள'த்துப் புதை
குழிகளுக்குள்
அழிக்கப்பட்ட முகங்கள்
பலவற்றுடனாய் - உன்முகமும்
சிதைக்கப்பட்டதே...

சிறகு முறிக்கப்பட்ட
உன் தோழமை வானம்பாடியின்

இதயக் குமுறலாய்...

சிதைக்கப்பட்ட உந்தன்
கனவுகள் நாளோடு நாளாக
நனவாகின்றன...
உன்னை அழித்தோர்
எல்லைக்கு அப்பால்
ஏக்கங்களுடன் - மரண
ஏக்கங்களுடன்...

'சிவஜீவன்' - நீ
உதிக்கும் விடியலில்
ஒரு செஞ்சுடர்
நீ ஒரு செஞ்சுடர்!...



## என்னோடு என்னாக!

ஒளிரும் மின் விளக்குகளின்
வெளிச்ச அலைகளில்
என் பின்னாலும் முன்னாலும்
தொடர்கின்றது - என் நிழல்
நிழலாய்...

ஓடி,அரங்கி,ஒளிந்து,புரண்டு
பார்த்தேன் - கண்ணுக்குப்
புலனானதாய் தொடர்கின்றது
என்னோடு என்னாக
நிழல்...

தூவி விட்டுச் சென்ற

மழையின் நனைப்பில்
துளிர்த்துக் கொண்ட இலைகளின்
மகிழ்வுடனாய் - என்
நெஞ்சமும்...

பனியுதிர்த்து இளவேனிற்
காலமாய்
சைபீரியாவின் புல்லினங்கள்
வானம் மீதே ஓவியமாய்க் கீறும்
நவீனம்...

இன்னமும் தொடர்ந்த படியே
என் நிழல்...
விலகிச் செல்ல நினைத்தேன்.
விலக்கியும் செல்ல
முயன்றேன்
தொடரும் பாதைகளில்
நானே நானாகவும்
என்னேடு என்னாக - என்
நிழலும்!...

சில நேரம் ஓய்வாய் - பின்
தொடர்கிறது நிழல் - யுத்தமாய்
நிழல்.

'திளேப்பரில்' தூண்டிலிட்டு துள்ளும்
மீன்களை துலாவிக்
கொண்டிருப்பவர்களின்
பெலமூர்க்கனால் சிகரட்
புகை மூச்சை


முட்ட - இன்னொரு
ஓய்வாக அமர்வேன் நான்.
என்னோடு என்
நிழலுமாய்!...

பண்ணைப் பாலத்தில்
ஒட்டி மீனுக்காய் - ஓய்வாய்
தூண்டிலிட்டு கால் சறுக்கி
உதடுகளில் உப்புக் கவ்விய
நினைவுகளில் மிதக்கையில்
தினேப்பரில் தூண்டிலிட்டுப் பிடித்தேன்
என் நிழலின் பிம்பத்தை.

ஆயினும் இன்னும்
தொடர்வாய் தொடர்கிறது
நிழல் - என்னோடு
என்னாக!...

(தினேப்பர்- சிமோலன்ஸ்க் நகரில் ஓடும்
ஆறு.)

•



## *உரத்துக் கூறுங்கள்*
## *உரிமையுள்ளவரே!*

யார் கூறினர்?
யார் கூறினர்?

தேசமிழந்தவனையும்;
தேகமிழந்தவனையும்
அகமும் - முகமுமாய்
எல்லாமுமே இழந்தவர்
எத்தனை பேரை - என்னவென்று
கூறினர்?

யார் கூறினர்?
யார் கூறினர்?

யாருக்கு இன்னமும்
வினா கூறி - விடை எழுத முடியும்
எங்கள் மனதினில் எழும்
வினாக்களுக்கு விடை தான்
முகத்திலேயே உண்டு.
ஆயினும் என்னவென்று கூறினர்
எம்மவரை?..

யார் கூறினர்?
யார் கூறினர்?

பம்பரமாய்ச் சுழலும்
பந்துப் பூமியினில்
பாதங்களையே இழந்து
மெய் வாய்க்கும் பூட்டுமாய்
எங்களின் வேதனைகளை
எப்படியெல்லாம் கூறினர்.

யார் கூறினர்?
யார் கூறினர்?

செய்திகளையே தினமும் சோடித்து
எங்கள் மனதுக்கு மாலையிட்டு
நிம்மதியிழந்த எங்கள் மண்ணும்
தினமும் உலக ஓரத்தில் அழுகின்ற
மக்களை என்னவென்றனர்.

யார் கூறினர்?
யார் கூறினர்?

வெந்த வேதனைகளுக்கு
பூந்தளிர்களால் தேன் தடவ வேண்டாம்
மரித்த மாந்தர்களுக்கு
வெண் தாமரையின் நஷ்ட ஈடும்
வேண்டாம்
வேண்டியது ஒன்று -
சுதந்திரக் காற்றையாவது
சுவாசிக்கும் சுதந்திரம் மட்டுமாவது
வேண்டும்.

ஆயினும் யார் கூறினர்?
யார் கூறினர்?

நாம் முகமும்; நிலமும் இழப்பினும்
மனதினில் வைராக்கியம் இழக்கவில்லை
வானமே தலையில் வீழ்ந்திடினும்
கடலே கண் மேல் பெருக்கிடினும்
எங்கள் உரிமை வீழ்வதுமில்லை
எங்கள் மானம் தாழ்வதுமில்லை

ஆயினும் யார் கூறினர்?
யார் கூறினர்?

நாடற்ற நாதியில்லா நாடோடியென
உலக அகராதியில் -
தமிழன்!...

உரத்துக் கூறுங்கள்
இன்னுமாய்
உரத்துக் கூறுங்கள்

வாழத் தெரியாமலோ
மானம் இழந்தவனாகவோ
வழி தவறி வந்தவனல்ல
தமிழன்!...

உரத்துக் கூறுங்கள்
இன்னுமாய்
உரத்துக் கூறுங்கள்

வினாவுக்கு முன்பே முற்றுப்புள்ளியாய்
விடையைக் கொடுங்கள்!
வானமே எமக்கு சிறகுகளை விரித்து
கடலே எமக்கு அலைகளை
கட்டுமரமாய் வரிக்க
ஓர் நாள் வரும் செய்தியாய் - நிஜமாய்
அதனிலும் நிச்சயமாய்...
சுதந்திரத்தில் ஓர் காலை
விடிந்தது எம் தேசமுமாய்...
சுதந்திர மனிதன் - தமிழன் -
அன்று புதிய அகராதியில்
எழுதுங்கள் தமிழன் யாரென?...

அதுவரையில்
யார் கூறினர்?
யார் கூறினர்?

எல்லோருக்குமாக உரத்துக் கூறுங்கள்!


தமிழன் -

வீரத்தின் விருட்சம்!
மானத்தின் மகுடம்!
அன்பினில் அமுதம்!

எல்லோருக்குமாக உரத்துக் கூறுங்கள்!

தமிழன் -
வீரத்தின் விருட்சம்!
மானத்தின் மகுடம்!
அன்பினில் அமுதம்!

●



## பதினாறாவது வயதும் நானுமாய்!

என் பதினாறாவது அகவைக்குள்.
பதினாறாவது வயதுக்கள் நான்
விதைத்துக் கொண்டிருக்கிறேன்
என் இளமைக் கனவுகளை...

கனவுலகில் மிதந்து
இடரும் அலைகளின் மீதாய்
தண்டு வழித்த
என் காதற் படகு
கரை சேராது அலையோடு அலையாக
கரைந்ததோ! அன்றில்
தொடுவானம் தான் தீமுட்டிக்
கொண்டதோ!

ஆயினுமாய்...

இளமையைத் துறந்து விட்டு
இன்னுயிர் ஈந்த எம்
இனியவர்க்காய்
என்னால் - எம்மால் ஏது
கூற முடியும்?

சொந்தமும் - சுகமுமின்றி
தம்மையே தாயகத்துக்காய்
தியாகித்த அவர் முன் - எம்
இளமையின் பசிக்குத் தீனியிட
மட்டுமா காதலா!
அன்றில் தாய் மண்ணுக்காக
விடியும் தேசத்திற்காக
விழித்திருக்கவா?...

இன்னமும் ஞாபகங்களும்
நினைவுகளுமாய் கரை மீளும்
என்னோடு...

விடியலுக்கு விதையாகி
விருட்சமாய் வீரியங் கொண்டே
இன்னுயிர் ஈந்தனரே
எம்முன்னால் எமக்காகவே
தியாகித்தனர்...


அவர்கள் சென்ற
பாதை கரடு முரடானது - நீண்டு
நெடியது...

ஆயினும் இறுதி - விடிவசந்தத்தின்
வாசலே!

எமக்காய் அவர்கள்
ஈந்தனர் தம் இளமுயிரை...
எமக்காய்
என் பதினாறாவது வயது
பால்ய இளமைகளைத் தூரவீசி விட்டு
அணி வகுக்கிறேன்
உங்களின் கடின பயணத்தில்...

என்னோடு - எந்தன்
பதினாறாவது வயது
இளமைக் கனவுகளையும்
காற் பொக்கட்டுக்குள் இட்டபடியாய்!...

●



## உன் வரவை வேண்டி!

அன்பே!
என் உள்ளத்தின் உள்ளே
உயிர் கொண்டிருப்பவளே!
எத்தனை நாள்
இன்னமும் நான் - என்னோடு
கழியும் தனித்த
நிமிடங்களுடனாய்!...

உந்தன் அன்புப் போர்வையில்
காதல்க் குளிரைத் தாங்கிக்
கொண்டவன் - நான்...
கொட்டும் மழைத்துளிர்களில்
மனதில்
காதல்த் தீயை ஏற்றி
இதயத்தைச் சூடேற்றி

உயிர்ப்பித்தவள் - நீ...


இனியேது தயக்கம்!
அச்சம் மடம் நானம்
பயிர்ப்பென - அன்றைய
அமாவாசை பழ மரபுகளில்
உன்னையுமா தேய்ந்திடச்
சொன்னேன்!...

இனியவளே!
முற்றத்து மல்லிகையின்
காலை மலர்ச்சியில்
உந்தன் முகத்தினைக் கண்டு
குதூகலிக்கின்றேன்...
சிவக்கும் செவ்வரத்தம் பூக்களின்
இதழ்கள் ஒவ்வொன்றிலும்
உந்தனினிய உதடுகளின்
இனிமையைக் குடிக்கின்றேன்...

மாங்கிளியும் - மரங்கொத்தியுமாய்
உயரப் பறக்கும்
சிறகு விரிப்பினில்
எனக்காக நீ விட்ட தூதாயென
ஏவலுங் கொள்கிறேன்...

இனியவளே!
பொறுத்தது என் உடலின்
நரம்புகள் மாத்திரம் தான்,
என் உயிரின் உணர்வுகளுக்கே
பொறுமையே இனி இல்லை...

உன் வரவின் ஆவலில்
வழி மேல் விழியாய் அல்ல,
தெருவெல்லாம் - என்
இதயக் கண்களை
விதைத்துள்ளேன் - உனைக் கண்கள்
கவரும் காணலுக்காய்!...



## என்னை எரிக்கும் நான்!

உன்னைத் தொலைத்து விட்டுத்
தானே - என்னை
எரித்துக் கொள்கிறேன்
என்னை - உன் காதல்த் தீயினாள்...

கருகுகின்ற என் இதயத்திற்கு
இன்னமும் எதற்காய்
ஊற்றிக் கொள்கின்றாய்
உந்தன் அழகில் மிளிரும்
உதட்டின் எண்ணெயை
காதல் காயத்திற்கு
அம்பு மேல் அம்பாக
வெந்த புண்ணிலேயே வேல்
பாய்ச்சுகின்றாயே!...

போதும்...
இனியேது உன்னோடு
என் வாழ்வு!
கண் எதிரே என் கண்ணை
சுட்டு விரலால்
குத்திக் கொண்டு
குருடாக்கிக் கொள்கின்றேன்
இருட்டுக்குள் என் வாழ்க்கையை!...

நினைவெல்லாம் உந்தன்
நினைப்பினில் வாழ்ந்த
என் நிஜமும் கலைந்து போயிற்று
நிழலாகிப் போன
சூரியன்களுடனாய்...


இன்னும் என் மனதும்
வாயும் மௌனித்துத் தான்
கிடக்கின்றன...

உனை நினைத்து நச்சரிப்பதா
அன்றில்
உனக்காக இன்னும்
கவிதைகளின் சொற் கோவையில்
எழுத்தை உருக்கி
வான் கலங்களிலா
தூது விடுவது?...

கலைகின்ற உணர்வுகளின்
உச்ச அனலினில்

மனந் தளம்பிக் கொள்கிறது...
ஏது இப்படியாய் - என்னை நானே
காதல்த் தீயினில்
கருக்கிக் கொள்ளும்
நாழிகையிலிருந்து
விடுவிக்க முடியாமல்
கூண்டிலடைபட்ட சிட்டுக் குருவியாய்
என் காதல்ச் சிறகுகளை
நானே நானாக
முறித்துக் கொள்கிறேன்!...

●



## புதிய சோதரி!

சுடரொளி படர
சுடு மணலில் முகங் கழுவியும்
மனம் மணங் கொள்ளும்
ஒரு கோடை கால
யாழின் - சின்னச் சின்ன
குச்சி ஒழுங்கைகளில்
அலை தேடும் கரையாய்
என் மனம் தேடித் - தேடி
களைத்துக் கொள்ளும்
அவளையே கலைத்துக் கலைத்து
களைத்துக் கொள்ளும்
சிதறுண்ட மனதுடனாய்...

உள்ளங் கையில் காயம்பட்டதாய்
தன் கையே தன்னைச் சுட்டதாய்

தளராத மனதுடன்
தொடரும் அவளின் - கனவுகளுடன்
இளமையின் சக்கரத்துக்குள்
சுழன்று கொள்ளும்
பதினாறு வயதுக்கால
வாழ்க்கை...

தெருவோரம் எங்குமாய்
தேரோடும் குதூகலிப்புக்களில்
ஊர் விழித்துக் கொள்ளும்
இள வெயில் துளிர்க்கும்
உதயக் காலையில்
மிதி - மிதியாய் மிதித்து
மிதி வண்டியில் அலையும்
அவளின் பின்னால்
நானும் - என் மனமுமாய்...


கை காட்டிவிட்டுச் சென்றவளாய்
காதல் வெற்றியில்
மூழ்கிக் கொண்டிருந்த
என்னை - முற்றுமாய்
முழுக்குப் போட விட்டுவிட்டாள்...
சகோதரமே என விழித்து
கட்டுப் போட்டு விட்டாள்
காதலின் எல்லைக்கும்
உள்ளத்தின் உணர்வுக்குமாய்...

விழியோரம் காத்தேன்
வீதியோரம் கலைத்தேன்
மனதோடும் நினைத்தேன்

கனவோடும் வாழ்ந்தேன்
மறுதலிப்பாய்
அவளின் அழகுக்குள்
மூழ்கியிருந்த முழு என்னையே
முழுக்குப் போட விட்டு
விட்டாள்!

இனியேது!
சகோதரமே - அன்போடு
அரவணைப்போடு - என
அம்மா பெறாத
அன்புச் சகோதரியாய்
இன்னொருத்தி எனக்கு!

இப்போ அவளுக்குத் - தேடிக்
கொண்டிருக்கிறேன்
நல்ல வரனை!
நம்மூர் மணப் பந்தல்ச்
சந்தையில்!



# இறுதியல்ல, இனி ஆரம்பமே!

முடிவடைந்து போனது - காதல்
நீளக் கதையின் இறுதிப் பகுதி.

சொட்டுச் சொட்டாய்
தேன் இனிப்பாய் மூழ்கிக்
கொண்டிருந்தேன் இளமையின்
பருவத்துக்குள்.

காற்றோடு போயிற்று
காகிதக் குப்பைகளுடனும் சேர்ந்திற்று.
அவளோடு இளமையின் இனிமையாய்
நனைந்து
களைத்திருந்த நாட்கள் எல்லாமாய்...

நிலவைக் கையில் பிடித்துக்
கொடுக்காமலும்
வானவில்லை வளைத்து
முறிக்காமலும் - அன்னமோ
மயிலோ மானோ தூது
போகாத குளிர் காற்றின்
வியர்ப்பில் விரிந்த
காதல்!

குளிரின் நடுக்கத்தில்
கை கோர்த்து உலாவித் திரிந்த
கோர்க்கி பார்க்கிலும்
திவர்ஸ்க்கயா தெருக்களிலும்
நம் சுவாசங்களால்
விதைத்து விட்டுச் சென்ற
காதலின் விதைகள்
முகிழ் கொள்கின்றன...


இங்கேயுமாய்
அந்தியும் அருந்ததியும் பார்த்து
அம்மி மிதித்து
கல்யாணச் சோடாபங்களின்
நினைவுகளில்
மூழ்கியிருந்த
பகற்கால வெண்கனவுகள்
காற்றோடு காற்றாக
கரைந்து போயின...

முடிவடைந்து போயிற்று
ஓர் முற்றுமாய்

காதல் நீளக் கதையின்
இறுதிப் பகுதி!

இன்னும் ஆரம்பிக்கப்படாமலுள்ள
காதல்க் கதையின்
ஆரம்பப் பகுதிக்கு
இந்த முற்றும் - ஓர்
அர்ப்பணமாகட்டும்!...


●



# அக்னிப் பிரவேசம்..

இன்னொரு அக்னிப் பிரவேசத்தில்
உங்கள் வீர முகங்கள் மாத்திரம்
தீயிலும் எரியா தீர முகங்களாய்
மிளிர்ந்து கொள்ளும்!..

அலையோடு கடலோடு
அனலோடு மணலோடு
நம்மருமைத் தமிழுக்காய்
நீவிர் உயீரூட்டி- உம்முயிர்களை
தீவெட்டியாய் - தீப்பொறியாய்
தீயினிலுங்கருகா மெழுகுவர்த்திகளாய்
நெருப்போடு வாழும்
நெஞ்சுரிமை கொள் மேன்மைத் தமிழராய்..
எம் துயரந் தீர்க்க - நீவிர்
தியாகிகளாய் சுவாலை கொண்டீர்!..



என் எண்ணச் சிறகுகளுக்கு வண்ணந் தீட்டி, கவிதைகளாய் வானத்தில் பறக்க விட்டுள்ளேன். புதுமைகள் பலவும் படைக்கும் புரட்சித் தமிழின் இனிமையை, செங்களம் கண்ட பனி முகடுகளிலும் தென்றலோடு தேனிசையாய் கலந்து வருவதையும் காண்கின்றோம். தமிழின் இனிமை, தமிழின் செழிமை, தமிழின் பெருமை உலகெங்கும் வியாபிப்பதனைக் கண்டு, பேனாக்களை ஏந்திய கரங்களில் ஒருவனாய் நானும் மனமகிழ்வு அடைகின்றேன்.

ஒவ்வொரு வரியிலும் - என் உள்ளத்தின் உயிர் உருவங் கொள்கின்றது. ஒவ்வொரு கவிதையிலும் என் நிஜ முகத்தினை விதைத்துக் கொள்கின்றேன். என் உணர்வுகளை தொட்டுச் சொல்லும் கவிதைகள், என் வாழ்வின் உயிர் நாதத்தை வெளிப்படுத்திக் கொள்வதிலும் மனமகிழ்வடை கின்றேன்.

எந்தன் கவிதைகளுக்கு என்றும் கருப் பொருள் ‘‘விடுதலை’’ என்ற ஒரே அதி உன்னத உயிர்ச் சொல் தான். ஆதலினால் விடுதலையை, எங்கள் தேச விடுதலையை நேசிக்கும் நீங்களும் அக்னிப் பிரவேசத்தில் என்னோடு என்னுடனாக உள் நுழைவீராக!